152. “பகளாபாத்” என்ற உருது மொழிச் சொல்லின் தமிழ் – பொருளைக் கூறுக.

(A) தயிர்ச்சோறு (பழத் துண்டுகள் உடையது)

(B) எலுமிச்சம் சோறு (வேர்க்கடலை உடையது)

(C) குருமா (காய்கறிகள் உடையது)

(D) பிரியாணி (முந்திரிப் பருப்பு உடையது)

(E) விடை தெரியவில்லை

153. பிறமொழிச் சொல்லைக் கண்டறிக.

(A) மறை

(B) மல்யுத்தம்

(C) மற்போர்

(D) பிணை

(E) விடை தெரியவில்லை

154. வீராயி, மே தினமே வருக, போன்ற படைப்புகளின் ஆசிரியரைக் கண்டறிக.

(A) ஈரோடு தமிழன்பன்

(B) அப்துல் ரகுமான்

(C) தமிழ் ஒளி

(D) மீரா

(E) விடை தெரியவில்லை

155. கீழ்வரும் கலைச்சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

Barbell Strategy

(A) வங்கியின் பற்றுரிமை

(B) வன்பிடி செயல்நெறி

(C) மென்பிடி செயல்நெறி

(D) வங்கிகளின் வங்கி

(E) விடை தெரியவில்லை

156. தகவல் தொழில்நுட்ப கலைச்சொற்களோடு பொருத்துக.

(a)	Torsion	1.	தொலைக்காட்சி வலவிளிம்பு
(b)	Torridity	2.	தோளணி
(c)	Tippet	3.	முறுக்கம்
(d)	Snivet	4.	வெப்ப மண்டல நிலை

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	4	1	2	3
(C)	3	4	2	1
(D)	3	1	2	4

தெரியவில்லை

157. கூற்று [A] : குறிஞ்சிப்பாட்டு என்னும் நூலை முதன்முதலில் சுவடியிலிருந்து அச்சில் பதிப்பித்தவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்

காரணம் [R] : இவர் சங்கச் செய்யுளைப் பதிப்பிக்கும் ஆர்வம் கொண்டவர். உ.வே.சா.வின் மாணவர்

(A) கூற்று [A] - சரி : காரணம் [R] - தவறு, [R] என்பது [A] ஐச் சரியாக விளக்கவில்லை

(B) கூற்று [A] - தவறு : காரணம் [R] - சரி

(C) கூற்று [A] - தவறு : காரணம் [R] - தவறு

(D) கூற்று [A] - சரி : காரணம் [R] - சரி, [R] என்பது [A] ஐச் சரியாக விளக்குகிறது

(E) விடை தெரியவில்லை

158. தவறான இணையைத் தேர்ந்தெடு

(i) கன்னு – தெலுங்கு

(ii) கெண் – பர்ஜி

(iii) கொண் – தோடா

(iv) கண்ணு – தமிழ்

(A) (i) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

159. பொருத்துக :

(a)	வளை	1.	அறைதல்
(b)	உள்ளம்	2.	முதிர்
(c)	நரை	3.	நெகிழ்தல்
(d)	தண்ணுமை	4.	மெலிதல்

	(a)	(b)	(c)	(d)
(A)	3	4	2	1
(B)	3	1	4	2
(C)	3	2	1	4
(D)	4	3	1	2

(E) விடை தெரியவில்லை

160. மயிலின் ஒலி மரபைக் கண்டறிக.

(A) அகவும்

(B) முரலும்

(C) கத்தும்

(D) கனைக்கும்

(E) விடை தெரியவில்லை

161. கூற்று சரியா? தவறா?

கூற்று 1. ஜார்ஜ் யுக்லோ போப் பிரான்சு நாட்டைச் சார்ந்தவர்

கூற்று 2. 19 ஆவது வயதில் சமயப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

கூற்று 3. சாந்தோம் பகுதியில் சமயப் பணியாற்றினார்

கூற்று 4. குழந்தைகளுக்குத் தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்க வினா-விடை முறையில் இரு இலக்கண நூல்களை இயற்றினார்

(A) கூற்று 1, 2, 3, 4 சரி

(B) கூற்று 1, 2, 3 சரி 4 தவறு

(C) கூற்று 1, 2, 4 சரி 3 தவறு

(D) கூற்று 1, 4, 3 சரி 2 தவறு

(E) விடை தெரியவில்லை

162. தேவநேயப் பாவாணரின் சிறப்புப் பெயர் ____________

(A) கவி ஞாயிறு

(B) தமிழ் ஞாயிறு

(C) கலை ஞாயிறு

(D) மொழி ஞாயிறு

(E) விடை தெரியவில்லை

163. கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு நூலின் பெயரைச் சுட்டுக.

பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று

சமணமுனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு

இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது

அறக்கருத்துகளைக் கூறுவது. இதனைத் தொகுத்தவர் பதுமனார்.

(A) பழமொழி நானூறு
(B) புறநானூறு
(C) நாலடியார்
(D) ஏலாதி
(E) விடை தெரியவில்லை

164. "ஞாலம் பகலும் பாற்பட்டு அன்று இருள்" - யாருக்கு?

(A) கல்லாதவர்க்கு
(B) ஆராயாமல் நட்பு கொண்டவர்க்கு
(C) பிறரோடு பழகி மனமகிழ முடியாதவர்க்கு
(D) கூடா ஒழுக்கம் கொண்டவர்க்கு
(E) விடை தெரியவில்லை

165. "கணைகொடிது யாழ்கோடு செவ்விது" என்ற உவமையின் வாயிலாக வள்ளுவர் எதனை உணர்த்துகிறார்?

(A) மக்களின் பண்புகளை அவரவர் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்
(B) நடுவுநிலைமை இல்லாதவர், நடுவுநிலைமை உடையவர் தன்மையை அறிதல்
(C) கல்லாதவர், கற்றவர் இயல்புகளை அறிந்து கொள்ள வேண்டும்
(D) நல்ல நட்பு, தீய நட்பினால் உண்டாகும் விளைவுகளை உணர்தல்
(E) விடை தெரியவில்லை

166. சரியானத் தொடரைக் கண்டறிக.

(A) அனுமன் சீதையைத் தேடி வந்தனர்.

(B) அனுமன் சீதையைத் தேடி வந்தான்.

(C) அனுமன் சீதையைத் தேடி வந்தார்கள்.

(D) அனுமன் சீதையைத் தேடி வந்தாள்.

(E) விடை தெரியவில்லை

167. சரியான விடையைத் தேர்க.

பாய் – என்ற சொல்லைப் பிறவினையாக்குக.

(A) பயிற்று

(B) பாய்ந்து

(C) பாய்க

(D) பாய்ச்சு

(E) விடை தெரியவில்லை

168. ஏற்புடைய தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக.

(A) வீடு தச்சனால் கட்டப்பட்டது.

(B) இராமனால் இராவணன் கொல்லப்பட்டான்.

(C) கண்ணன் தானே படித்தான்.

(D) கண்ணன் அருச்சுனனுக்குப் பயிற்றுவிக்கச் செய்தான்.

(E) விடை தெரியவில்லை

169. "படிக்கின்ற பையன்" – பெயரெச்ச வகை அறிந்து எழுதுக.

(A) இறந்தகால பெயரெச்சம்

(B) நிகழ்கால பெயரெச்சம்

(C) எதிர்கால பெயரெச்சம்

(D) ஈறுகெடாத பெயரெச்சம்

(E) விடை தெரியவில்லை

170. "செல்" என்னும் வேர்ச்சொல்லுக்குப் பொருத்தமான வினையாலணையும் பெயர்ச் சொல்லைத் தேர்க.

(A) செல்க

(B) செல்கிறான்

(C) செல்வான்

(D) சென்றவன்

(E) விடை தெரியவில்லை

171. 'ஓடு' என்னும் வேர்ச் சொல்லின் வினையெச்சச் சொல்லைக் கண்டறிக.

(A) ஓடி விழுந்தது

(B) ஓடா

(C) ஓடிய

(D) ஓடாது

(E) விடை தெரியவில்லை

172. நட – என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் கண்டறிக.

(A) நடவாமல்

(B) நடக்கா

(C) நடந்தான்

(D) நடந்து

(E) விடை தெரியவில்லை

173. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

Astronomical triangle

(A) வெடிப்பு முக்கோணம்

(B) மண்ணியல் முக்கோணம்

(C) விண் முக்கோணம்

(D) வளிமண்டல முக்கோணம்

(E) விடை தெரியவில்லை

174. Madia oil என்னும் கலைச்சொல்லுக்கு இணையான சொல்லைத் தருக.

(A) விளக்கெண்ணெய்

(B) சூரியகாந்தி எண்ணெய்

(C) ஆமணக்கு எண்ணெய்

(D) பனை எண்ணெய்

(E) விடை தெரியவில்லை

175. பொருத்தமான இணைச் சொற்களைக் கண்டறிக.

Tyloses

(A) குமிழ்கள்

(B) பள்ளங்கள்

(C) குழிகள்

(D) வெடிப்புகள்

(E) விடை தெரியவில்லை

176. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) அடுக்குத் தொடரில் உள்ள சொற்களை தனி தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்கு பொருள் உண்டு.

(B) அடுக்கு தொடரில் உள்ள சொற்களைத் தனித் தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்கும் பொருள் உண்டு.

(C) அடுக்குத் தொடரில் உள்ள சொற்களைத் தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்குப் பொருள் உண்டு.

(D) அடுக்கு தொடரில் உள்ள சொற்களை தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்குப் பொருள் உண்டு.

(E) விடை தெரியவில்லை

177. 'நாற்றிசையொளிறுந்தமிழ்' – இச்சொல்லைப் பிரித்தெழுதுக :

(A) நான்கு + திசை + ஒளிறும் + தமிழ்

(B) நாற் + றிசை + யொளிறுந் + தமிழ்

(C) நாற்று + திசை + ஒளிறும் + தமிழ்

(D) நாற்றிசை + யொளிறுந்தமிழ்

(E) விடை தெரியவில்லை

178. 'பெரிதின்பமுற்றே' – என்ற சொல்லைப் பிரித்தெழுதுக.

(A) பெரி + தின்பம் + உற்றே

(B) பெரி + தின்பம் + முற்றே

(C) பெரிதின்பம் + உற்றே

(D) பெரிது + இன்பம் + உற்றே

(E) விடை தெரியவில்லை

θ

179. உயிரியலில் "Achene" என்னும் சொல்லிற்கு இணையான கலைச்சொல்லைத் தருக.

(A) செவ்வறைக்கனி

(B) தாய்ப்பால் மறத்தல்

(C) சீழ்க்கட்டி

(D) உதிர்தல்

(E) விடை தெரியவில்லை

180. 'பார்ப்பு' என்ற பெயர் மரபுச் சொல், எதனோடு பொருந்தும்?

(A) மாடு

(B) யானை

(C) பறவை

(D) பாம்பு.

(E) விடை தெரியவில்லை

181. கூற்று : மனித வாழ்க்கை, ஓர் ஆறு; குளம் அன்று.

காரணம் : வாக்கியத்தில் ஒரே எழுவாயானது பல பயனிலைகளைக் கொள்ளுமாயின் இடையிலுள்ள பயனிலைகளுக்கு அரைப்புள்ளி இட வேண்டும்.

(A) கூற்று சரி; காரணம் தவறு

(B) கூற்று தவறு; காரணம் சரி

(C) கூற்று சரி, காரணம் சரி

(D) கூற்று தவறு, காரணம் தவறு

(E) விடை தெரியவில்லை

182. அரைப்புள்ளி அமையும் இடங்கள்

கூற்று : பெருந்தலைவர் காமராஜர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனார்; அணைகள் பல கட்டினார்; தொழிற்சாலைகள் பல திறந்தார்; தமிழ்நாட்டின் தரத்தை உயர்த்தினார்.

காரணம் : ஒன்றுக்கு ஒன்று மாறான கருத்துக் கொண்ட சிறிய சிறிய வாக்கியங்கள் சேர்ந்து முழுக் கருத்தை விளக்குமானால் ஒவ்வொரு சிறு வாக்கியத்தின் பின்னரும் அரைப்புள்ளியிட வேண்டும்.

(A) கூற்று சரி; காரணம் சரியன்று

(B) கூற்று சரியன்று; காரணம் சரி

(C) கூற்று காரணம் இரண்டும் சரி

(D) கூற்று காரணம் இரண்டும் சரியன்று

(E) விடை தெரியவில்லை

183. கூற்று : யானை நிரை குளத்திற்குத் தண்ணீர் குடிக்கச் சென்றன.

காரணம் : தொகுப்பாகச் செல்லும் யானைகளை 'நிரை' என்று கூறுவதே மரபுப் பெயராகும்.

(A) கூற்று சரி; காரணம் தவறு

(B) கூற்று தவறு; காரணம் சரி

(C) கூற்று சரி; காரணம் சரி

(D) கூற்று தவறு; காரணம் தவறு

(E) விடை தெரியவில்லை

184. அலுவலகக் குறிப்பு மற்றும் அலுவல் சாராக் குறிப்பு என்னும் கடித வகைகளை ________, ________ என்று மொழி பெயர்க்கலாம்.

(A) Unofficial letter, Official letter

(B) Official note, Unofficial note

(C) Official letter, Unofficial letter

(D) Official note, Unofficial letter

(E) விடை தெரியவில்லை

185. மொழிபெயர்ப்பு செய்க/தருக

ARCHIVES AND RESEARCH

(A) கோப்பும் ஆராய்ச்சியும்

(B) ஆவணக் காப்பகம் மற்றும் ஆராய்ச்சி

(C) ஆவணமும் ஆய்வும்

(D) ஆவணத் தேடல்

(E) விடை தெரியவில்லை

186. மொழிபெயர்ப்பு தருக :

CAVEAT PETITION

(A) அவசரத் தன்மை மனு

(B) மனித உரிமை மனு

(C) முன்னெச்சரிக்கை மனு

(D) தடை உத்தரவு

(E) விடை தெரியவில்லை

187. பிரித்து எழுதுக.

நெட்டிலை

(A) நெடுமை + இலை (B) நெட்டி + இலை

(C) நெடு + இலை (D) நெ + இலை

(E) விடை தெரியவில்லை

188. சேர்த்து எழுதுக.

“மீன் + கண்” என்னும் சொல்லைச் சேர்த்து எழுதுக.

(A) மீட்கண் (B) மீன்கண்

(C) மீங்கண் (D) மீற்கண்

(E) விடை தெரியவில்லை

189. இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிந்து எழுதுக.

அருந்து, அறுந்து

(A) குடி, துண்டுபட்டு

(B) மருந்து, விருந்து

(C) பக்கம், விழுந்து

(D) மாற்று, குடித்தல்

(E) விடை தெரியவில்லை

θ

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. **[190 – 194]**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் என்று இன்றும் நினைவுகூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துக்கள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபால கிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். இவர் மொழிபெயர்ப்பாளராகவும், நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர். தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராக பணியாற்றிய இவர், ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்ற தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கரகம்' என்ற நூலாக வெளியிட்டார். அவர்தான் நீதிபதி மாயூரம் வேதநாயகம்.

வினாக்கள் :

190. வேதநாயகம் நகர்மன்றத் தலைவராகப் பணியாற்றிய இடம் எது?

(A) சென்னை

(B) காஞ்சிபுரம்

(C) மாயவரம்

(D) சிதம்பரம்

(E) விடை தெரியவில்லை

191. 'நீயே புருஷ மேரு...' என்றப் பாடலை பாடியவர் யார்?

(A) கோபால கிருஷ்ண பாரதியார்

(B) பிரதாப முதலியார்

(C) மாயூரம் வேதநாயகம்

(D) சுத்தானந்த பாரதியார்

(E) விடை தெரியவில்லை

θ

192. மாயூரம் வேதநாயகத்தின் தாய்மொழி யாது?

(A) தமிழ்

(B) தெலுங்கு

(C) மலையாளம்

(D) ஆங்கிலம்

(E) விடை தெரியவில்லை

193. நீதிமன்ற தீர்ப்புகள் அடங்கிய நூலின் பெயரைக் குறிப்பிடுக.

(A) பிரதாப முதலியார் சரித்திரம்

(B) சித்தாந்த சங்கிரகம்

(C) நீயே புருஷ மேரு

(D) நீதிமன்ற தீர்ப்புகள்

(E) விடை தெரியவில்லை

194. மாயூரம் வேதநாயகம் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்?

(A) 21 ஆம் நூற்றாண்டு

(B) 19 ஆம் நூற்றாண்டு

(C) 20 ஆம் நூற்றாண்டு

(D) 18 ஆம் நூற்றாண்டு

(E) விடை தெரியவில்லை

195. தொடர் வகையில் மறைந்துள்ள உருபை கண்டுபிடித்துப் பொருத்துக.

(a)	கண்மை	1.	6-ம் வேற்றுமை உருபு
(b)	நகைப்பெட்டி	2.	உவம உருபு
(c)	அரசன் வாள்	3.	4-ம் வேற்றுமை உருபு
(d)	கனியிதழ்	4.	2-ம் வேற்றுமை உருபு

	(a)	(b)	(c)	(d)
(A)	1	2	3	4
(B)	3	4	2	1
(C)	3	4	1	2
(D)	1	3	4	2

(E) விடை தெரியவில்லை

196. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்திடுக.

தன்கிளை செறாஅமை அன்பு எனப்படுவது

(A) அன்பு தன்கிளை எனப்படுவது செறாஅமை

(B) அன்பு செறாஅமை எனப்படுவது தன்கிளை

(C) அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை

(D) தன்கிளை செறாமை எனப்படுவது அன்பு

(E) விடை தெரியவில்லை

197. பிழையற்ற தொடரைத் தேர்க.

(A) இனி செய்யலாம்

(B) மற்றை செல்வம்

(C) இன்றிகொடேன்

(D) தேச பக்தி

(E) விடை தெரியவில்லை

198. எழுத்துப்பிழையுள்ள சொல்லைக் கண்டறிக.

(A) கடைகால்

(B) கத்தரிக்கோல்

(C) ஐந்நூறு

(D) ஆவாரம்பூ

(E) விடை தெரியவில்லை

199. வேற்றுமை உருபை ஏற்காது; செயலையும், காலத்தையும் காட்டும் சொல் கண்டறிக.

(A) உரிச்சொல்

(B) இடைச்சொல்

(C) பெயர்ச்சொல்

(D) வினைச்சொல்

(E) விடை தெரியவில்லை

200. "வறக்குமேல்" என்னும் சொல்லிற்கு எதிர்ச்சொல் கண்டறிக.

(A) இயல்பு

(B) குற்றம்

(C) பெய்யாது

(D) பெய்யும்

(E) விடை தெரியவில்லை

பகுதி-இ – பொதுத் தமிழ்

Part-C – General Tamil

வினாக்கள் : 101–200 | **மொத்த மதிப்பெண்கள் : 150**

Questions : 101–200 | **Total Marks : 150**

---

101. பொருத்துக :

(a)	இறப்பாவது	1.	தொழில் பிறவாமை
(b)	நிகழ்வாவது	2.	இறப்பி னிகழ்வின் எதிர்வின்
(c)	எதிர்வாவது	3.	தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை
(d)	முக்காலம்	4.	தொழிலது கழிவு

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	1	2	4	3
(C)	1	2	3	4
(D)	2	3	1	4

(E) விடை தெரியவில்லை

102. உறுதிக் கூற்று : உயர்திணைப் பலர்பாலில் அர், மார், விகுதிகள் வந்தாலும் 'கள்' விகுதி சேர்த்து எழுதுதல் உண்டு.

காரணம் : அரசர் என்று எழுதும்போது மரியாதைப் பன்மைக்காக 'கள்' விகுதி வரும்.

(A) உறுதிக் கூற்று சரி, காரணம் தவறு
(B) உறுதிக் கூற்று தவறு, காரணம் சரி
(C) உறுதிக் கூற்று, காரணம் இரண்டும் சரி
(D) உறுதிக் கூற்று, காரணம் இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

103. 'முடக்கொற்றன் வந்தான்' - இத்தொடரின் திணை கண்டறிக.

(A) உயர்திணை ஆண்பால்
(B) அஃறிணை ஆண்பால்
(C) விரவு திணை
(D) உயர்திணை பெண்பால்
(E) விடை தெரியவில்லை

104. கி.பி. 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலில் தமிழ்மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலின் நாடு மற்றும் தலைநகரை கண்டறிந்து எழுதுக.

(A) இத்தாலி – உரோம்

(B) போர்ச்சுகீசு – லிசுபன்

(C) இங்கிலாந்து – வின்செஸ்டர்

(D) ஜெர்மன் – பெர்லின்

(E) விடை தெரியவில்லை

105. "விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு".

– இச்செய்யுளடிகள் இடம்பெறும் நூலைக் கண்டறிக.

(A) நாலடியார்

(B) நான்மணிக்கடிகை

(C) திருக்குறள்

(D) சிறுபஞ்சமூலம்

(E) விடை தெரியவில்லை

106. சரியான இணையைக் கண்டறிக.

1. ஆசாரக் கோவை – கபிலர்
2. பழமொழி – முன்றுறை அரையனார்
3. நான்மணிக்கடிகை – பெருவாயின் முள்ளியார்
4. இன்னா நாற்பது – விளம்பிநாகனார்

(A) 1 - சரி

(B) 2 - சரி

(C) 3 - சரி

(D) 4 - சரி

(E) விடை தெரியவில்லை

107. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடுக்க :

(A) குரங்கு

(B) மூசு

(C) ஊகம்

(D) கடுவன்

(E) விடை தெரியவில்லை

108. அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல் :

(A) மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம், தெய்வம், புள், காடுறை உலகம்

(B) காடுறை உலகம், தீம்புனல் உலகம், தெய்வம், புள், பெருமணல் உலகம், மைவரை உலகம்

(C) காடுறை உலகம், தெய்வம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம், புள், மைவரை உலகம்

(D) புள், பெருமணல் உலகம், காடுறை உலகம், தெய்வம், தீம்புனல் உலகம், மைவரை உலகம்

(E) விடை தெரியவில்லை

109. வெற்பன், தினை, அகில், காயா – இவற்றில் பொருந்தா சொல்லைக் கண்டறிக.

(A) வெற்பன்

(B) தினை

(C) காயா

(D) அகில்

(E) விடை தெரியவில்லை

110. பொருத்துக :

மரபுத் தொடர்கள்		பொருள்
(a) கைச்சரக்கு	1.	நெட்டி வாங்குதல்
(b) கை முடக்கம்	2.	ஏமாற்றுதல்
(c) கொடுக்குப் பிடித்தல்	3.	பணமுட்டுப்பாடு
(d) சொடக்கெடுத்தல்	4.	கற்பனையாகக் கூறும் சொல்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	4	1	2	3
(C)	4	2	1	3
(D)	3	4	2	1

(E) விடை தெரியவில்லை

111. ‘உகிர்ச் சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற் போல’ என்ற உவமைத் தொடருக்கு ஏற்ற பொருளைக் கண்டறிக.

(A) மகிழ்ச்சி

(B) வியப்பு

(C) கொடுந்துன்பம்

(D) அச்சம்

(E) விடை தெரியவில்லை

112. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

முரி, முறி

(A) வளைவு, தளிர்

(B) முற்றம், உடல்

(C) முள், மரம்

(D) கடல், மரம்

(E) விடை தெரியவில்லை

113. லகர ளகர ழகர வேறுபாட்டில் "மூழை" என்னும் சொல்லின் பொருள் கூறுக.

(A) மூளை

(B) மூலை

(C) அகப்பை

(D) மூங்கில்

(E) விடை தெரியவில்லை

114. பொருள் தருக :

த, தா

(A) அரண், வலிமை

(B) குபேரன், வலி

(C) தந்தை, தாகம்

(D) தளிர், கடவுள்

(E) விடை தெரியவில்லை

115. சந்திப் பிழை அறிதல் :

பிழையான தொடரைத் தேர்ந்தெடு

(A) தமிழ்ச்சொல்

(B) நேர்க்கோடு

(C) மாற்றுப்பெயர்

(D) வெந்நீர்க் காய்ச்சு

(E) விடை தெரியவில்லை

116. Fomites – என்பதற்கு இணையான சொல்லைத் தேர்வு செய்க.

(A) நோய்ப்பரப்பிகள்

(B) உச்சிக் குழிவு

(C) பெருந்துளை

(D) தவளைச் சொறி

(E) விடை தெரியவில்லை

117. கலைச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பொருத்துக :

(a)	Cadaver	1.	அழுகல் புண்
(b)	Cacosmia	2.	வாய்நாற்றம்
(c)	Canites	3.	உயிரற்ற உடல்
(d)	Cancrum	4.	நரைமுடி

	(a)	(b)	(c)	(d)
(A)	1	2	3	4
(B)	3	2	4	1
(C)	4	3	1	2
(D)	2	4	3	1

(E) விடை தெரியவில்லை

118. நாடகம் என்னும் சொல்லுக்கு வேர்ச்சொல் ________________ என்று பாவாணர் கூறுகிறார்.

(A) நாடு

(B) நடி

(C) நட

(D) நா

(E) விடை தெரியவில்லை

119. உறுதிக் கூற்று : நீ என்பது ஒருமைக்குரியது.

காரணம் : இரு திணைக்கும் பொதுவாய் நின்றது.

(A) உறுதிக் கூற்று சரி காரணம் தவறு

(B) உறுதிக் கூற்று தவறு காரணம் சரி

(C) இரண்டும் சரி

(D) இரண்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

120. அவன், அவள், அது – என்னும் சொற்கள் எவ்வகைப் பெயரைச் சார்ந்தது?

(A) கிளை நுதற்பெயர்

(B) முறைப்பெயர்

(C) தொழிற்பெயர்

(D) சுட்டுப்பெயர்

(E) விடை தெரியவில்லை

121. கூற்று : ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும்.

காரணம் : சொற்களில் வல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய மெல்லின எழுத்து வரும்.

(A) கூற்று சரி, காரணம் தவறு

(B) கூற்று தவறு, காரணம் சரி

(C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

122. "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து". — இக்குறட்பாவிற்குப் பொருந்தும் பழமொழியைக் கண்டறிக.

(A) பதறாத காரியம் சிதறாது

(B) புத்திமானே பலவான்

(C) அடக்கம் ஆயிரம் பொன் தரும்

(D) அதிக ஆசை அதிக நஷ்டம்

(E) விடை தெரியவில்லை

123. "நப்போல் வளை" — என்ற ஔவையின் வரிக்குத் தொடர்புடைய பழமொழியைக் கண்டறிக.

(A) இடறின காலே இடறும்

(B) உலகம் பலவிதம்

(C) கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

(D) கெடுவான் கேடு நினைப்பான்

(E) விடை தெரியவில்லை

124. பிழை திருத்துக.

(A) ஓர் கொட்டு கொட்டினான்.

(B) ஒரு குட்டு கொட்டினான்.

(C) ஓர் குட்டு கொட்டினான்.

(D) ஒரு குட்டு குட்டினான்.

(E) விடை தெரியவில்லை

125. "அருமருந்து அன்ன பிள்ளை" என்னும் சொல்லின் மரூஉவைக் கண்டறிக.

(A) அருமருந்து பிள்ளை

(B) அரு அன்ன பிள்ளை

(C) மருந்து பிள்ளை

(D) அருமந்த பிள்ளை

(E) விடை தெரியவில்லை

126. எண்ணிடைப்படக் கிடந்ததா __________ படுமோ.

(A) நினைக்கவும்

(B) எண்ணவும்

(C) செப்பவும்

(D) பகிரவும்

(E) விடை தெரியவில்லை

127. துர்க்கை, பசுவின் இளங்கன்று இவற்றைக் குறிக்கும் சொல்.

(A) எற்றி
(B) கொற்றி
(C) கோட்டி
(D) ஏற்றி
(E) விடை தெரியவில்லை

128. பொருளறிந்து பொருத்துக :

(a)	வனப்பு	1.	இனிமை
(b)	பிடி	2.	அழகு
(c)	மருங்கு	3.	பெண் யானை
(d)	வீறு	4.	பக்கம்
(e)	மதுரம்	5.	வலிமை

	(a)	(b)	(c)	(d)	(e)
(A)	2	3	4	5	1
(B)	1	2	3	4	5
(C)	3	1	2	4	5
(D)	1	3	2	5	4

(E) விடை தெரியவில்லை

129. ஓரெழுத்தொரு மொழி எழுத்துகளின் எண்ணிக்கையோடு பொருத்துக :

(a)	"ம" – வருக்கத்தில்	1.	ஐந்து
(b)	"ந" – வருக்கங்களில்	2.	ஒன்று
(c)	"ச" – வருக்கங்களில்	3.	ஆறு
(d)	"ய" – வருக்கத்தில்	4.	நான்கு

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	4	1	3	2
(C)	3	4	1	2
(D)	3	1	4	2

(E) விடை தெரியவில்லை

130. எதிர்ச்சொல் கூறுக.

'குணக்கு'

(A) வடக்கு

(B) தெற்கு

(C) குடக்கு

(D) கொடுக்கு

(E) விடை தெரியவில்லை

131. பொருத்துக :

(a) படமாடக் கோயில் — 1. மதம்

(b) நடமாடக் கோயில் — 2. நீங்கிய

(c) கரடம் — 3. இறைவன்

(d) தீர்ந்த — 4. மக்கள்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	4	1	2	3
(C)	3	4	1	2
(D)	3	4	2	1

(E) விடை தெரியவில்லை

132. அயற்சொற்களை – தமிழ்ச்சொற்களோடு பொருத்துக :

(a) தெம்மாண்டி — 1. ஆக

(b) கோசரம் — 2. விற்பனை

(c) ரீதி — 3. அறிவற்றவன்

(d) விக்கிரயம் — 4. ஒழுங்கு

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	4	1	3	2
(C)	3	4	1	2
(D)	3	1	4	2

(E) விடை தெரியவில்லை

θ

133. பொருத்துக :

	இலை வகை		தாவரங்கள்
(a)	இலை	1.	சோளம்
(b)	தாள்	2.	தென்னை
(c)	தோகை	3.	வேம்பு
(d)	ஓலை	4.	புல்

	(a)	(b)	(c)	(d)
(A)	3	4	2	1
(B)	3	4	1	2
(C)	2	3	4	1
(D)	4	1	2	3

(E) விடை தெரியவில்லை

134. பொருத்துக :

	பூவின் நிலைகள்		சொற்கள்
(a)	பூ விரியத் தொடங்கும் நிலை	1.	செம்மல்
(b)	பூவின் மலர்ந்த நிலை	2.	வீ
(c)	மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை	3.	போது
(d)	பூ வாடின நிலை	4.	மலர்

	(a)	(b)	(c)	(d)
(A)	3	4	2	1
(B)	3	1	4	2
(C)	4	3	2	1
(D)	2	1	4	3

(E) விடை தெரியவில்லை

135. பின்வருவனவற்றில் தவறான இணை எது?

(i) தாராபாரதியின் இயற்பெயர் – இராதா கிருஷ்ணன்

(ii) தாராபாரதியின் நூல் – இது எங்கள் கிழக்கு

(iii) தாராபாரதியின் அடைமொழி – நாடக ஞாயிறு

(iv) தாராபாரதியின் கவிதைகளில் ஒன்று – பாரதம் அன்றைய நாற்றங்கால்

(A) (iv) மட்டும்

(B) (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

136. தவத்திரு குன்றக்குடி அடிகளார் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுக்களில் சரியானவை

(i) குன்றக்குடி என்னும் ஊரில் பிறந்தவர்

(ii) திருக்குறள் நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர்

(iii) அருளோசை என்னும் இதழை நடத்தியவர்

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i), (ii) மற்றும் (iii)

(E) விடை தெரியவில்லை

137. ஒரு சொல்லிற்கு இணையான வேறுசொல் அறிதல்.

உபசரிப்பு

(A) இன்முகம்

(B) விருந்தோம்பல்

(C) நகையாடல்

(D) வரவேற்றல்

(E) விடை தெரியவில்லை

138. கோகம், கோங்கம் – இவற்றின் பொருள்

(A) தாமரை, மாமரம்

(B) பறவை, நெல்லி

(C) குரங்கு, பூந்தாது

(D) கூகை, அரசு

(E) விடை தெரியவில்லை

139. இருபொருள் தரும் சொற்களில் தவறான இணையைத் தேர்வு செய்க.

(A) ஆழி – மோதிரம், கடல்

(B) ஆறு – வழி, எண்

(C) தாமரை – மலர், மான்

(D) வேங்கை – புலி, அளி

(E) விடை தெரியவில்லை

140. "உறவு போகாமல் கெட்டது கடன் கேட்காமல் கெட்டது" எனும் பழமொழியின் சரியான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) உறவு நீடிக்க உறவினர்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும்

(B) யாருக்கும் கடன் கொடுக்கக் கூடாது

(C) உறவினர்கள் அனைவரும் கெட்டவர்கள்

(D) எவ்வளவு கொடுத்தாலும் உறவினர்கள் கடன் கேட்பார்கள்

(E) விடை தெரியவில்லை

141. அறிஞர் அண்ணாவின் பேச்சு மடைதிறந்த வெள்ளம் போன்று இருக்கும் – இதில் வரும் உவமைத்தொடருக்கான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) தடையின்றி மிகுதியாய்

(B) தெள்ளத்தெளிவாக

(C) வெளிப்படை தன்மை

(D) எளிதில் புரியும்

(E) விடை தெரியவில்லை

142. பொருத்துக :

	மரபுத் தொடர்கள்		பொருள்
(a)	கக்கல் கரிசல்	1.	தளர்தல்
(b)	கடைத்தேறுதல்	2.	கலங்கல் நீர்
(c)	கட்டுடைதல்	3.	தூங்குதல்
(d)	கண் வளர்தல்	4.	ஈடேறுதல்

	(a)	(b)	(c)	(d)
(A)	2	4	1	3
(B)	1	2	4	3
(C)	4	3	1	2
(D)	2	1	3	4

(E) விடை தெரியவில்லை

143. “கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல” – எனும் உவமைத்தொடரின் பொருளைத் தேர்க.

(A) எதிர்பாராத நன்மை

(B) எதிர்பாராத துன்பம்

(C) எதிர்பாராத விபத்து

(D) எதிர்பாராத மகிழ்ச்சி

(E) விடை தெரியவில்லை

144. பொருத்துக:

	உவமைத் தொடர்		பொருள்
(a)	ஆற்றில் கரைத்த புளி போல	1.	உருவாகாத திட்டம்
(b)	நாய்பெற்ற தெங்கம்பழம் போல	2.	மிக அரிது
(c)	கரடி பிறை கண்டது போல	3.	பயனில்லாமை
(d)	ஆண்டிகள் மடம் கட்டியது போல	4.	பயனற்ற செயல்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	3	4	1	2
(C)	4	2	3	1
(D)	2	3	4	1

(E) விடை தெரியவில்லை

145. "Borderline Personality Disorder" என்ற கலைச்சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்லை எழுதுக.

(A) வரம்புநிலை விருப்பம்

(B) வரம்புநிலை ஆளுமைக் கோளாறு

(C) வரம்புநிலை ஆளுமைச் சீராய்வு

(D) வரம்புநிலை ஒழுங்கீனம்

(E) விடை தெரியவில்லை

146. ஆங்கிலக் கலைச்சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

Warrant

(A) எச்சரிக்கை

(B) நிறுவனக் கைப்பற்றுதல்சார் பண ஒதுக்கீடு

(C) பற்றாணை

(D) ஒருங்கேற்பு

(E) விடை தெரியவில்லை

147. புணரி, ஆர்கலி என்ற சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) நிலம்

(B) காற்று

(C) கடல்

(D) வெள்ளம்

(E) விடை தெரியவில்லை

148. ஓரெழுத்து ஒருமொழி – பொருத்துக :

(a) மா — 1. கட்டுதல்

(b) ப — 2. கால்பங்கு

(c) யா — 3. சா

(d) வ — 4. மரணம்

	(a)	(b)	(c)	(d)
(A)	3	4	1	2
(B)	3	1	4	2
(C)	4	1	3	2
(D)	4	3	1	2

(E) விடை தெரியவில்லை

149. பேச்சுவழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைக்கவும்.

(a) கழிசடை — 1. சுமையடை

(b) அப்பாவி — 2. வெண்கலம்

(c) வெங்கலம் — 3. கழியாடை

(d) சும்மாடு — 4. அற்ப ஆவி

	(a)	(b)	(c)	(d)
(A)	1	2	3	4
(B)	2	1	4	3
(C)	4	1	2	3
(D)	3	4	2	1

(E) விடை தெரியவில்லை

150. நீறு பூத்த நெருப்புப் போல – இத்தொடரின் பொருள்

(A) உணர்ச்சி வெளிப்படும்

(B) உணர்ச்சி மறைந்திருக்கும்

(C) உணர்ச்சி இல்லை

(D) உணர்ச்சி மாறுபடும்

(E) விடை தெரியவில்லை

151. பொருத்துக :

	பழமொழிகள்		பொருள்
(a)	இட்டுக் கெட்டாருமில்லை ஈயாமல் வாழ்ந்தாருமில்லை	1.	இறைவனின் திருவடி மகிமை
(b)	உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது	2.	எதிலும் நன்மை
(c)	இருகினால் களி; இளகினால் கூழ்	3.	கல்வியின் சிறப்பு
(d)	அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டான்	4.	ஈகையின் சிறப்பு

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	4	1	2	3
(C)	3	4	1	2
(D)	4	2	3	1

(E) விடை தெரியவில்லை